**செய்தி வெளியீடு எண்:537** **நாள்:18.11.2016**

## செய்தி வெளியீடு

### வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அந்நிய செலாவணியை மாற்றுவதற்கு தமிழ்நாட்டில் வங்கிகளில் சிறப்பு கவுன்டர்கள் திறக்கப்பட்டுள்ளன – சுற்றுலாத்துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., அவர்கள் . தகவல்.

----

கடந்த சில தினங்களுக்கு முன் மைய அரசு ரூ.500 மற்றும் ரூ.1,000 நோட்டுக்களை செலாவணியற்றதாக அறிவித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அந்நியச் செலாவணியை மாற்றிக் கொள்ள ஏதுவாக, தமிழ்நாட்டில் வங்கியின் கிளைகளில் சிறப்பு கவுன்டர்களை அமைத்துத்தர சுற்றுலாத்துறை ஆணையர் அவர்கள் இந்திய ரிசர்வ் வங்கியை கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, இந்திய ரிசர்வ் வங்கி உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, ஐசிஐசிஐ (ICICI) வங்கியின் மூலம் கீழ்க்கண்ட கிளைகளில் சிறப்பு பண பரிவர்த்தனை பிரிவு வசதியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை கிளை:

செனோடாப் சாலை (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு. குணசேகரன், அலைபேசி 9944466993)

**புதுச்சேரி** கிளை:

1) மிஷன் தெரு, 2) இந்திரா காந்தி சதுக்கம், 3) லாஸ்பெட், 4)ஆரோவில்.

(தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.குமரன் வடிவேல், அலைபேசி 8939944380)

கோயம்புத்தூர் கிளை:

திருச்சி சாலை (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு. உறரிஉறரன், அலைபேசி 9500047629)

மதுரை கிளை:

கே.கே. நகர் (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு. ஸ்ரீதர், அலைபேசி 8056000474)

திருச்சிராப்பள்ளி கிளை:

தில்லை நகர் (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.பிரசன்னா, அலைபேசி 9790366600)

**தஞ்சாவூர்** கிளை:

1) தஞ்சாவூர் மெயின், 2) தஞ்சாவூர் மேற்கு மெயின் (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.ராஜா அலைபேசி 9751881242)

**வேலூர்** கிளை:

1) வேலூர் மெயின் கிளை, 2) காந்தி நகர் கிளை, 3) சத்துவாச்சாரி (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.விஜயானந்த் அலைபேசி 9500027574)

**இராமநாதபுரம்** கிளை:

இராமநாதபுரம் (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.ஜான் அலைபேசி 9840383745)

**கொடைக்கானல்** கிளை:

எஸ்.ஜி.ஜே. சங்கதுரை உறால் (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு. ஸ்ரீதர் அலைபேசி 8939847242)

**திருவண்ணாமலை** கிளை:

திருவண்ணாமலை (தொடர்பு கொள்ளவேண்டியவர் பெயர்: திரு.இலியாஸ் அலைபேசி 9839823872)

இது தவிர கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரத்தில் ஐசிஐசிஐ கிளை இல்லாததால், மாற்று வங்கியின் கிளைகள் மூலம் இந்த ஏற்பாட்டை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

எனவே, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் அனைவரும் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறும், கட்டணமில்லா தொலைபேசியை (எண்.1800 4253 1111ல்) காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தகவல் பெற தொடர்பு கொள்ளுமாறும் சுற்றுலாத்துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**